தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௫௪	திருவள்ளுவர் யாண்டு ௨௲௧௧ இரௌத்திரி ஐப்பசி 1980 அக்டோபர் - நவம்பர்	மலர் ௭

மங்கல மடந்தை — கண்ணகி

சி. கோ. தெய்வநாயகம் M. A M. Phil . B Sc . Dip-in Agri
Cert-in-Epl. Cert-in-Ling.

(சென்ற இதழ் 148 - பக்கத் தொடர்ச்சி)

தன் கணவனை மீண்டும் பெறக்கூடிய கற்புத்திறம் வாய்ந்தவராகவே கண்ணகியார் இளங்கோவால் சுட்டப் பெறுகின்றார். இப்பெற்றி குறித்தே குன்றக் குரவையில் பெண்கள் இப்பத்தினிக் கடவுளைப் பரசுகின்றனர். கண்ணகியாரைப் பரிசிறால் தம்மின் பிரிந்த தலைவன் மீண்டும் தம்மை நாடி வருவான்; வந்து மங்கல வாழ்வளிப்பான் என உறுதி கொண்டுள்ளனர். மனை விளக்க மடவார்க்கு இன்றி யமையாத கற்புக் கடத்துடன் மங்கல அணியாகிய தாலியின் சிறப் பினையும் உலகறியச் செய்த மங்கல மடந்தை கண்ணகியே . யாவர்' உயர்ந்தோரேத்தி, பலர் புகழ்ந்து பரவும் பத்தினியாம் கண்ணகி யாரை வணங்குவார் அனைவரும் மணம் நல்கும் கடவுளாகவே. மங்கலம் அளித்திடும் தேவியாகவெ, மங்கலா தேவியாகவே, போற்றிப் பரசி நல்வாழ்வு பெற்றனர் எனலாகும்.

பொற்றொடி மாதர் மணம் :

குன்றக் குரவையின் இறுதிப்பகுதி மங்கல தேவியாக விளங்கும் கண்ணகியாரை பெண்கள் வழிப்பட்டால், அப்பெண்கள் தம்மனத்திற்குகந்த மணவாளரைப் பெற்று பெருவாழ்வு வாழ்வர் என்பதனைப் புலப்படுத்துகின்றது.

புலர் வாடு நெஞ்சம் புறங்கொடுத்துப் போன
மலர் தலை வெற்பன் வரைவானும் போலும்
முலையிறால் மாமதுரை கோளிழைத்தாள் காதற்
தலைவனை வானோர் தமராருங் கூடிப்

பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும் யாம்

பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுகம்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே.

பாடுற்று
பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குனம் பைம்புனத் துள்ளாளே
பைத்தர வல்குல் கணவனை வானோர்கள்
உய்த்துக் கொடுத்தும் உரையோ ஒழியாரே.

வானக வாழ்க்கை அமரர் தொழுதேத்த
கானநறு வேங்கைக் கீழாளோர் காரிகையே
கான நறுவேங்கைக் கீழாள் கணவனொடும்
வானக வாழ்க்கை மறுதரவோ இல்லாளே,

மறுதர வில்லாளை யேத்தியாம் பாடப்
பெறுக தில் அம்ம இவ்வூரு மோர்பெற்றி
பெற்றி யுடையதே பெற்றி யுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றியுடைய திவ் வூர்.

என குறவர் மகளிர் கண்ணகியாரை — மங்கல மடந்தையினை வணங்கி வழிபடும் நிலையில், அம்மகளிரின் காதலர் அவர்பாற் சேர்ந்தமையினை அடுத்து அடிகள் கீழ்வருமாறு வாழ்த்துகின்றார்.

" என்றியாங்
கொண்டு நிலைபாடி யாடுங் குரவையைக்
கண்டு நங் காதலர் கைவந்தா ரானா
துண்டு மகிழ்ந்தானா வைகலும் வாழியர் !! "

பல்கலைச் செல்வர்

தெ. பொ. மீ.

சிறுவை. நச்சினார்க்கினியன்

ஒருவர் கதர் சொக்காய் அணிந்து தன் மகளுக்கு உணவு அடுக்கு ஒரு கையிலும், ஒரு கையில் புத்தகமுமாக சென்னைச் சித்ரா திரையரங்குக் கட்டடத்தைக் கடந்து அண்ணாசாலைக்குப் போகிறார். பக்கத்தில் டிராம் வண்டி வருவதைக் கூட கவனிக்கவில்லை. எதிரே வந்த ஒருவர் அவர் கையைப் பிடித்து நிறுத்தினார். வண்டியும் சென்றது இவரும் தப்பினார். இது நடந்து சுமார் 35 ஆண்டுகள் இருக்கும். என்ன ருசியோ — என்ன அவசரமோ அப்புத்தகத்திலுள்ள கருத்தினை உடனே அறிந்துகொள்ள வேண்டும் என்று. இச்சிறு நிகழ்ச்சிக்கு உரியவர்தான் பன்மொழிப் புலவர், பல்கலை வித்தகர், தென்றமிழ் மொழியைத் தீதறக் கற்று எண்ணில் பட்டம் எழிலுறப் பெற்ற முனைவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

சென்னைச் சிந்தாரிப்பேட்டை ''தமிழகம்'' எனும் இல்லத்தின் அருகில் வருபவர்கள் சாளரத்தின் வழி உள்ளே பார்க்கும் வாய்ப்பு நேர்ந்தால், ஒரு நூக்கமர நாற்காலியில் ஒரு பெரிய மேசையின் முன் அமர்ந்தபடி புத்தகப் பக்கங்களை அப்படியும் இப்படியும் புரட்டும் காட்சியும், வலப்பக்கமும் இடப்பக்கமும் மரப்பெட்டகங்களில் தடித்த புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும் காட்சியும் பளிச்சிடும். மற்றொருநாள் அச்சாளரத்தின் வழி நோக்கினால் எழுதிக்கொண்டிருக்கும் காட்சி தோன்றும். பிறிதொருநாள் அப்பக்கம் வரும்போது அச்சாளரத்தின் உள்நோக்கினால் சில அன்பர்களுக்குத் தமிழ், தத்துவம் முதலியன விளக்கம் தருவதைக் காணலாம். அந்தத் திருவுருவந்தான் மீனாட்சிசுந்தரனார். எளிமைக்கு எடுத்துக்காட்டு, நெற்றியில் திருநீற்றின் பொலிவு, தூய கதராடையின் தோற்றம், சினத்தை வெறுத்த சிந்தனையாளர். ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் மனம். ஓய்வுள்ள நேரத்தில் வீணையை மீட்டி இசையில் ஈடுபடும் மனம்.

இவர் பச்சையப்பர் கல்லூரியிலும், சட்டக் கல்லூரியிலும் பயின்று கலைப் பட்டங்கள் பெற்றார், இவர்தம் தந்தையார் தென்பட்டினம் பொன்னுசாமி அவர்கள் இவரைச் சிறந்த சட்டப் பேரறிஞராகக்காணவேண்டும் என்ற ஆவல். தந்தையின் மனம் இன்பம் பெற எப்பொழுதும் ஆங்கிலப் புத்தகத்தைக் கையில் வைத்திருப்பாராம். ஆனால் ஆழ்ந்து கற்பதோ தமிழ். தமிழ்த்துறையில் இமயம்போன்று

வளர்ச்சி பெற்றார் தமிழ்ப் புலவர் பட்டம் மாநிலத்திலேயே முதல் மாணவர் என்ற நிலையில் முதனிலை, நிறைநிலை என்று இருதேர்வு களையும் ஒரேநிலையில் திறம்பட எழுதி வெற்றி பெற்றார். அக்காலத் தில் தொல்காப்பியம் — சொல் சேனாவரையம் அச்சில் இல்லை. ஓலைச் சுவடியினின்றும் எடுத்து எழுதிப் படித்தார். ஓலையைப் பல முறைப் பார்த்ததால் தலைசிறந்த சொல்லோர் உழவராகக் காட்சி யளித்தார்.

தெ. பொ. மீ. அவர்கள் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி முதலிய மொழிகளைப் பயின்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருந்த டிப்ளமோ பட்டங்கள் அனைத்தையும் கற்றார். தெலுங்கு, கன்னடம், மலையாளம், பிரெஞ்சு, ஜெர்மன், முதலிய மொழிகள் கற்றார். 1934 முதல் தமிழ் மொழியில் உள்ள பட்டங்கள் பி. ஓ. எல்., எம். ஓ. எல்., இப்படிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டே இருந்தார், எம். ஓ. எல். பட்டம் பெற ஆராய்ச்சி கட்டுரையும் எழுத வேண்டும். அதற்காக இவர் '' தமிழ் ஒலிகள் '' என்ற கட்டுரை வரைந்து சிறப்படைந்தார். சுமார் 12 மொழிகளைக் கற்ற இவர் மொழியியலில் உலக அறிஞர்களில் தலைசிறந்தவராக விளங்கி யதில் வியப்பொன்றும் இல்லை. இவரைப் பிழைக்கத் தெரியாதவர் என்றுதான் அக்காலத்தில் கூறுவர். தமிழ் அறிவு பெற நாட்டஞ் செலுத்தியதைவிட, பெற்றோர் விருப்பத்தின்படி சட்டத்தில் ஆர்வஞ் செலுத்தியிருந்தால் இன்று இந்திய உச்ச நீதிமன்ற நடுவராய் விளங்கி ஓய்வு பெற்று இருப்பார்.

மொழிப்பற்றோடு நாட்டுப்பற்றும் பெற்றவர். சிறந்த தேசப் பக்தராய் விளங்கினார்கள். இயற்கையாகவே அப்பற்று இவரிடை மலர்ந்து மனம் வீசியது. தேசபக்தர் சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்கள் இவர்களின் அருமைச் சகோதரர் ஆவர். சிறந்த நாடக ஆசிரியர். பாவலரின் அரவணைப்பால் பல்கலைச் செல்வரின் தேசபக்தி சுடர்விட்டு ஒளி வீசியது. தேசபக்தர் தே. பொ. மீ. அவர்கள் 1940-ல் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு சிறை சென்றார். இவர்தமிழரசுக் கழகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டு விளங்கினார்.

தெ. பொ. மீ. அவர்கள் முன்னோர் செல்வ வளம் உடை யவர்கள். இருப்பினும் இவர்களது வாழ்வு எளிய வாழ்வு. மென்மை யான இயல்பு. தனக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்தார்கள். காலையில் எழுந்து காலைக்கடன்கள் முடித்து திருநீறு அணிந்து அமர்ந்தால் சுமார் 9 மணிவரை வருகின்றவர்களுக்கெல்லாம் அவரவர் கலைப்பசிக்கு உரிய உணவளித்து வருவார். அவர் களாக மாணவர்களைத் தேர்வு செய்வதில்லை. அவர்களைச் சுற்றி

இருப்பவர்கள் எல்லாம் அவர்களின் மாணவர்கள் ஆனார்கள். அம் மாணவர்களில் எண்ணற்றவர் தமிழ் முதுகலைப் பட்டம், தமிழ்ப் புலவர் ஆகிய பட்டம் பெற்று சிறந்தார்கள், பட்டம் படிப்பிற்கு மட்டும் தொண்டு செய்யவில்லை. தருக்க இயல், சித்தாந்தம், வேதாந்தம் முதலிய தத்துவக் கருத்துக்களையும் வழங்கினார்கள்.

திருக்குறள் உரையாசிரியர் கோ. வடிவேலு செட்டியார் மாணவர் அல்லவா; சொல்லவா வேண்டும். செட்டியாருடனிருந்து சென்னை வேதாந்தசங்கம் அமைத்தார். அங்கே வேதாந்த நூல்களைப் சொல்லலானார். சட்டத் தொழிலும் செய்து வந்தார். ஆனால் தமிழ்ப் பாடம்புலமைக்காதலை மறந்தாரில்லை. அரசியல் சமயம், இலக்கியம் சம்பந்தமான பல்வேறு இயக்கங்களில் தொடர்பு வைத்திருந்தார். அதில் ஒன்று சென்னைத் தமிழ்ச் சங்கம்; திரு. வி. க, கீ. தெய்வ சிகாமணி முதலியார், அரசர் அண்ணாமலைச்செட்டியார் ஆகியவர்கள் அரவணைப்பில் நடத்த தமிழ்ச் சங்கம் அது. அதன் செயலாளர் இவர்தான். திங்கள்தோறும் சிறந்த கூட்டங்களைக் கூட்டுவார். மாநாடுகள் நடத்துவார் பொதுமக்களுக்கு அடிக்கடி இலக்கிய விருந்து கிடைக்கும். இச்சிறப்புக்கள் அனைத்தும் பெற்ற இவர் தொண்டருக்குத் தொண்டராய் என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற நிலையில் இருந்துத் தொண்டாற்றினார்.

கல்விச் சிந்தனையாளராகிய இவர்கள் சிந்தாதிரிப்பேட்டை யில் உள்ள ஐந்து பள்ளிகளுக்குச் செயலாளராய் — பள்ளித் தாளா ளராய் விளங்கி வியத்தகு கல்வித் தொண்டு செய்தார்கள் 25ஆண்டு கள் தொடர்ந்து அப்பள்ளிகளின் தாளாளராய் இருந்து ஓலைக்கீற்று களில் அமைத்த வகுப்புகளை எல்லாம் திட்டமிட்ட கட்டிடங்களைக் கட்டி அதில் வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்தார் அப்பள்ளிகளின் நிர்வாகக் குழு ''தாளாளர் பதவிக்கு'' வெள்ளிவிழா எடுத்து சிறப் பித்தது. தேசத் தொண்டராகிய இவரைச் சென்னை மாநகராட்சியின் 'ஆல்டர்மென்' உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர் மாநகராட்சி வரவு — செலவு திட்டத்தின்போது, மிகச் சிறந்த ஆலோசனைகளை வழங்குவார்கள். சென்னை மைய நூலகத்தின் முதல் தலைவராக விளங்கி நூலகத்துறையிலும் தனது தொண்டின் முத்திரையைப் பதித்துள்ளார்கள். ஆயுள்காப்பு நிறுவனம் ஒன்றின் தலைவராகவும் விளங்கினார்கள். சில நிறுவனங்களுக்குச் சட்ட ஆலோசகராக அமைந்து பணி செய்தார்கள். இப்படிப் பல நிறுவனங்களில் ஈடு பட்டு மக்கள் நல்வாழ்விற்குத் துணை செய்தார்கள். தான் மட்டும் தொண்டனாக விளங்காது மற்றவர்களையும் தொண்டில் ஈடுபடுத் தினார்கள்.

ஒருமுறை சென்னைத் தமிழ்ச் சங்கம் சார்பில் பத்துப்பாட்டு மாநாடு நடைபெற்று முடிந்ததும் அங்கிருந்த ஒரு இளைஞரை அழைத்துப் பேராசிரியர் கா. ரா. கோவிந்தராச (முதலியார்) சிடம் ஆற்றுப்படுத்தி, "இந்த இளைஞரைத் துணையாக வைத்துக்கொண்டு வட சென்னையில் தமிழ் வகுப்புகள் நடத்துங்கள். திருவொற்றியூர், வண்ணையப்பதி ஆகிய இடங்களிலிருந்து சிந்தாதரிப்பேட்டை வர மக்கள் மிகவும் துன்பம் அடைகிறார்கள். ரெயில் பாதைக்காக அடிக்கடி வழியை மூடுகிறார்கள்" என்று அன்புக் கட்டளை இட்டார்கள். அதற்கு ஏற்ப அண்ணாப்பிள்ளைத் தெரு தென்னிந்திய பிரம்ம சாமஜத்தில் தமிழ் வகுப்புகள் நடந்தன. அதுதான் திருவள்ளுவர் தமிழ் கல்லூரி யாகக் காட்சி அளிக்கிறது.

தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்களின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது. சுமார் இருபது ஆண்டுகள் குறைந்த வயதுடைய தெ. பொ. மீ. அவர்களை "தோழர் மீனாட்சிசுந்தரனார்" என்று அழைத்தே மகிழ்வார். திரு. வி. கவும் தெ. பொ. மீயும் அன்பால் கட்டுண்டார்கள். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதற்கு ஒப்ப மிகச் சிறந்த முறையில் இருவரும் பழகினார்கள். திரு. வி. க. அவர்கள் தெ. பொ. மீ. அவர்களின் அறிவின் ஆற்றலை வியந்து பாராட்டுவர்.

திரு. வி. க. அவர்கள் "மீனாட்சி சுந்தரனார் பிறவி புண்ணியமுடையது" என்பர் "கலைக்கடல்" என்பார். "கலைமலை" என்பார், "புலவரா? கலைஞரா? கலையா? கலைக்கழகமா? என்பார். "தமிழ்க் கலைத் தேனைப் பருகி மயங்கும் வண்டு" என்பார். தெ. பொ. மீ. அவர்களின் புலமையை வியந்து வியந்து பாராட்டும் தாய்போல் விளங்கினார் திரு. வி. க. தன்மகன் சான்றோன் எனக் கேட்டதும் தாய் மகிழ்ந்து மயங்காமல் என்செய்வாள். பிரிதோர் இடத்தில் "பெண்மை போற்றும் விவேகானந்தன் இங்கே" என விம்மிதத்தோடு அழைத்தார். இந்த நல்வாழ்த்து வீண்போகவில்லை. தெ. பொ. மீ. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவராய் விளங்கியபோது அமெரிக்கா சென்று தமிழ்மொழியின் சிறப்புகளையும், தமிழ்மொழியியலின் வியத்தகு ஆற்றலையும் விளக்கினார்கள், திராவிட மொழிகளின் சிறப்புகளை எல்லாம் எடுத்துரைத்தார்கள். அச்சமயம் திரு. வி. க. இல்லை ஆனார்கள்.

திரு. தெ. பொ. மீ. அவர்களின் சொல்லாற்றலை திரு. வி. க. அவர்கள் வியந்து பாராட்டுவதைக் காண்போம்.

"தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரை சிலர் பல்கலைக்கழகம் என்று கூறுப. எனக்கு அவர் அவ்வாறு தோன்றுகிறாரில்லை. அவர்

பல்கலைக்கழகத்தையும் கடந்த ஒருவர்என்பது என் உட்கிடக்கை மீனாட்சிசுந்தரனார் காட்சி. எனக்குக் குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும் சேர்ந்த ஒரு கழகமாகத் தோன்றுகிறது'.

தேசத் தொண்டர், தமிழ்த் தொண்டர், தெ. பொ. மீ. அவர்கள் தமிழரசு கட்சியின் மாநாட்டின் தலைமையுரையாக 14—1—47ல் தமிழ்த் திருநாளாகிய தமிழ்த் திருநாளில் "தமிழரசு" எனும் பொருள்பற்றி ஆற்றிய உரையைக் காண்போம் :

"தமிழ்த் திருநாள் தமிழர் திருநாளாவது இயல்பே. தமிழ் எனத் தனியே வானத்துக்குள் கிடைக்கின்றதா? பழஞ்சுவடிகளில் பற்றி நிற்கின்றதா? புதுச்சுவடிகளில் பொலிந்து விளங்குகின்றதா? செந்தமிழ்ச் சுவடிகள் செல்லுக்கிரையானது பழங்கதையல்ல. அவ்வாறு அழிகிறது தமிழா? அழியாத கன்னித் தமிழ் பின் எங்கே இருக்கிறது? தமிழர் உள்ளத்திலே! தமிழர் எண்ணத்திலே! தமிழர் கனவிலே! தமிழர் நனவிலே! தமிழர் நாவிலே! தமிழர் பேச்சிலே! தமிழர் பாட்டிலே! தமிழன் அடிமையாய் இருந்தபோது பேசவும் வலிவற்றுக்கிடந்தான், ஆதலின் சுவடியைத்தேடினோம், நம்மை நாமே பிணமாக்கி நம் கல்லறை என ஏடுகளைப் பொட்டிட்டு வழிப்பட்டோம். செத்த மொழியா செந்தமிழ்? உயிரற்றவனா தமிழன்? அவன் வாழ்ந்தாலல்லவா தமிழ் வாழும்? தமிழ்நாடு வாழும்? கல்லும் மண்ணும் மணலும் நீருமா நாடு? பள்ளியில் சிறுவன் முக்கோணமாக வரையும் கோடுகளா தமிழ்நாடு?... ... ..." ...

(தமிழ்முரசு 1—2—47)

என்றெல்லாம் பேசுகிறது கலைமலை.

பல்கலைச்செல்வருக்கு 1960-ம்ஆண்டு அக்டோபர்த் திங்களில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் நீதிபதி இராசமன்னார் அவர்கள் தலைமையில் அரசர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் தெ. பொ. மீ. அவர்களின் எழுத்தாற்றலைப் பாராட்டிக் 'கேடயம்' வழங்கிச் சிறப்பித்தனர்.

எளிய பண்பினராகிய தெ. பொ. மீ. அவர்கள் நன்றி கூறும் முகத்தான்.

"நான் எழுத்தை ஆளுபவனோ அன்றி எழுத்தை ஆலுபவரோ அல்ல. என்றும் எழுத்துக்கு அடிமையே என்று நான் காப்புக் கட்டிக்கொண்டு நெடுநாளாகிவிட்டது. தமிழுக்கு வேறு தேர்ந்தால், எல்லா எழுத்தாளர்களும் என்னுடன் தோளோடு தோள் நின்று தமிழ்மொழியைக் காக்க முன் வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு வாள் தரப்படவில்லையே

என்று வருந்துகிறேன். குழந்தை தாய்ப்பாலை விரும்பினால்
அதற்கு மாலையா போட வேண்டும்?''

எனக் கூறி மகிழ்ந்தார்.

இவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவி ஏற்ற மகிழ்வில் இவர்தம் எண்ணத்தில் மலர்ந்த நக்கீரர் கழகத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி தம் வெள்ளி விழாவிற்கு அழைத்து மிகச் சிறந்த வரவேற்பு ஒன்றினை அளித்து மகிழ்ந்தது.

இப்பல்கலைச் செல்வர் — சொல்லேர் உழவர் தமிழ்க்கலைக் களஞ்சியத்தில் தமிழ் உயிர் எழுத்துக்கள் 12-க்கும் மெய் எழுத்துக்கள் 18-க்கும் அவ்வெழுத்துக்கள் தோன்றிய நாள் முதல் அதன் உருவ-ஒலி வளர்ச்சிபற்றி வரைபடங்களுடன் எழுத்துக்களின் வரலாறே படைத்தளித்துள்ளார்கள் அதுவல்லாமல் சிறப்புக் கட்டுரைகள் ஏழு எழுதியுள்ளார். இவைகள் இன்று பட்டமேற்படிப்பு படிப்பவர்களுக்கு துணையாய் அமைந்து வழி காட்டுகின்றன.

1. இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு (5-ம் தொகுதி)
2. இலக்கண வரலாறு (5-ம் தொகுதி)
3. தமிழ்ச் சங்கம் (5-ம் தொகுதி)
4. தமிழ் — மொழி வரலாறு (5-ம் தொகுதி)
5. திருக்குறள் (5-ம் தொகுதி)
6. திருவள்ளுவர் (6-ம் தொகுதி)
7. பத்துப்பாட்டு (6-ம் தொகுதி)

இவைகளை எல்லாம் இணைத்து அவருக்குச் செலுத்தும் நினைவு மலராக வெளிவருமாயின் — கலைப்பசி உடையவர்களுக்குப் படைப்பார்களாயின் மற்றொரு தெ. பொ. மீ. தோன்றுவதற்கு வழி செய்யும். எண்ணங்களில் — எழுத்தில் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் புலமை நலத்தை — புலமையின் சுவையைச் சுவைத்துப் பார்த்தல் தீதன்று.

'' After all He is a Tamil Pandit'' என்று வெள்ளைக் காலர் வைத்த சொக்காய்கள் சொன்னாலும் இரண்டு பல்கலைக்கழகங்களில் பேராசிரியராய், மூன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய் இருந்து சிறந்து விளங்கியவர்கள் பன்மொழி வித்தகர். ஒய்வு

பெற்றார், தத்துவத்துறையில் மூழ்கி மீண்டும் அமெரிக்கா முதலிய நாடுகளில் தமிழகம் போற்றிய தத்துவக் கருத்துக்களை அறிமுகம் செய்தார்கள்.

வழக்கறிஞராய், தமிழறிஞராய், மொழியியல் அறிஞராய், கல்வி நெறியாளராய், பன்மொழியாளராய், பல்கலைச் செல்வராய், சமயத் தொண்டராய், பேராசிரியராய், துணைவேந்தராய், சொற்பொழிவாளராய், எழுத்தாளராய் — சிந்தனையாளராய்ச் சிறந்து சிறப்புற்ற இவர் மதுரையில் 27—8—80-ல் வான் கலந்து நின்றார்.

தமிழகத்தில் புலமைச் செல்வம் அற்றுவருவதை அறிஞர் உலகம் அறியும். மீண்டும் நமக்கு ஒரு தெ. பொ. மீ. வேண்டும்.

இப்பேராவலை தமிழ் இளைஞர் உலகம் நிறைவேற்றுமாக!

ஆற்றுப்படை இலக்கியம்

K. சோமசுந்தரம் B. A., B. L., தஞ்சை

(சென்ற இதழ் 143-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமுருகனது திருவருட்பெற்றியினை ஆய்ந்து விளக்கிக் கூறும் அருந்தமிழ் ஆற்றுப்படை, யாவரேனும் தவத்தால் சிறக்கும் மெய்யன்பரு நெஞ்சுடன் அன்புடைய நன்மொழி'யினை ஓதி அன்பிற்காக் அன்பால். அன்பிலே தன்னை மறந்து, தானெனும் தன்மையிழந்து உருகுவாராயின் அன்னர் முருகனைக் காண்ப ரென்றும் நக்கீரரது சித்தாந்தத்தை விளக்கிக்கூறும் மாண்புடையது பேரன்புனடயாரை, அவ்வன்பு இறைமைத் தன்மையில் இருத்தி விடுமாதலால், அன்புடை நன்மொழி வீடு பேற்றிற்குரியதாகும்; முருகனை அன்பின் வடிவாக, அன்பின் பிழம்பாக அன்பின் உருவாகக் கருதுவோரின் பெரிய அன்பின் திறத்தைப்பற்றி புகழ்ந்துரைக்க வாய்மொழியில்லை. ஆற்றுப்படை பொதுவாக படைமடம், கொடை மடம், அன்பு மடம், ஆகியவற்றினைக் கூறினும், திருமுருகாற்றுப் படை இறையன்புணர்வு நிலைக்குரிய பக்திமடத்தைச் சார்ந்து நிற்கும் அன்பின் கொடுமுடியை எடுத்துக்காட்டும். அன்பின் நிலைக் களமே முருகனென, நக்கீரர் உணர்த்துவதால், அன்பினால்தான் 'நான்' எனும் உணர்வு நிலைகெட்டு இறைவனை அடைதற்குரிய சிவமாம் (முருகவேளுக்கும் சிவபெருமானுக்கும் வேறுபாடின்மை யின் அன்பே சிவம் : சிவமே இன்பம்) தன்மை வாய்க்கப்பெற்று பேரானந்த நிலையினைப்பெற இயலும், அன்புடைய நன்மொழியால்

முருகனை இடையறாது சிந்திப்பார் தம்மனதில் முருகன் மருந்துரு வாய் அமைந்து அறியாமை நோயினை அகற்றி விரும்பிய வீட்டின் பத்திற்குரியவற்றை யாவும் விரும்பியவாறு பெற வைப்பார் எனும் அறவுரையினை நக்கீரர் உபதேசமுறையால் அறிவுறுத்துவாராயினர். நக்கீரர் அன்புக்குத் தெய்வத்தன்மை தந்து அதனை நிலையாய இறையின்பம் எனப் பொருள் கொள்ளுவாராயினர்: மற்றும் அன்பு நெறியால் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சியினைப் பெருக வைத்து முருகனை அன்பின் வடிவாகப் பாவித்து விடுகிறார். அன்பு மீதூர ஆவியோடு ஆக்கை நெக ஆனந்தமாய்க் கசியப்பெற்று உருக, இறையின்பம் தானாகவே ஆற்றலுடன் வெளிபடுதல் தெளிவு, 'இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்பது மணி வாசகம்.

ஆகவே முருகனை பக்திச் சுவையோடு வழிபடும் முறையும், அவன் அருள்புரி வகையும், அடியார் தம்மியல்பும், ஒழுகலாறுகளின் இயல்பும், அருவ வணக்கமும், உருவ வணக்கமும் இன்ப ஓவிய மாகக் காட்டுவதில் இந்நூலுக்கு இணை இஃதேயாகும். மற்றும் ஐம்புலக்காப்பின் முறையும் பயனும் தத்துவநெறிகொண்டு, திருமுருகாற்றுப்படை மொழியப்படுவது உன்னற்பாலது. ஆற்றுப்படை இலக்கியப் பாக்களுள், முன்னுற வந்துநிற்கும் திரு முருகாற்றுப்படையின்கண், தத்துவஞான வித்தகக் கருத்துக் களையும், வாழ்வின் தத்துவ கோட்பாட்டினையும் இடையிடையே அருளுரைகளாக நக்கீரர் விளக்கியுள்ளார், சைவசித்தாந்தத்திற்கு வலிகோலும் அரிய தத்துவம் செறிந்த நுட்பங்கள், ஆற்றுப்படை இலக்கியத்தின் மேலாந்தரமாகப் போற்றப்படும் நிலையில் பொற்புற அமைக்கப்பட்டுள்ளதினன். இவ்வாற்றுப்படை நூல் சித்தாந்த செந்நெறியின் அமைப்புக்கு ஒரு முன்னோடியாக வயங்கி வழிகாட்டி யாகவும் திகழ்கிறது. முதிர்ந்த அன்பால் விளைந்த உயர்ந்த அறிவை மனப் பண்புகளோடு மலரச்செய்து, நக்கீரர் ஆற்றுப்படையினை மக்கள் வாழ்வுக்குச் சார்புடையதாக்கி, கருணையுள்ளத்து மாட்சியும், அருள்வெள்ளத்து நல ஆட்சியும் தோன்ற மக்களை அன்பு வழியே வீட்டின்பத்து நிலைக்கு அழைத்துச் செல்லும் வழியினை அறிவுறுத்து வாராயினர்.

பலபொருள் ஒரு சொல்லாகிய உலகமென்பது, மனமடங்கித் தெளிந்த உயர்ந்தோர்மாட்டே, மனமடங்க மகிழும் உயிர்த் தொகைகள் இளஞாயிற்றின் ஒளியில் சிவவீற்றில் }முகிழ்ந்த முருக வொளியினை கண்டு அவ்வொளியால் உலகு இயங்குவதை உணர்த்த நக்கீரர், ஆற்றுப்படையினைத் தொடங்கும்போது 'உலகமுவப்ப' என அருளுவாராயினர், 'நிலந் தீ நீர் வளி விசும் போடைந்தும்

கலந்த' (தொல்காப்பியம்) மயக்க உலகில், இம்மை வகைகளை ஆய, மறுமை வகைகளும் வாழ்வும் பேறும் தோன்றுதல் இயல்பு. இயங்கும் உலகம் 'சுவை, ஒளி, ஓசை நாற்றமென்றைந்தின் வகையினை ஆய்ந்து தெளிந்தவர் இடத்தாதலான், இறையுணர்வால் முருகனது அருளினைப் பெற அவனுறையும் படைவீடுகளில் ஐவேறு முதற்பொருள்களின் தன்மைகளை மேலேற்றி மெய்ஞான தத்துவ இயல்பு அமைய

குன்று அமர்ந்து உறைதலும் உரியன்;
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே;
ஆவினன் குடி அசைதலும் உரியன்;
ஏரகத்து உறைதலும் உரியன்;
குன்று தோறாடலும் நின்றதன் பண்பே;

என நக்கீரர் உணர்த்தி மண்ணுக்குரிய நிலையாய் நிற்கும் இயல்பையும், நீருக்குரிய செல்லும் தன்மையும், வானத்து வண்மையின் இயல்பும், காற்றின் ஆடற்றன்மையினையும் புலப்படுத்தியுள்ளது நோக்கற்பாலது. இவ்வைந்து படைவீடுகளில், முருகனை இறை பொருளாகக்கொண்டு, வழிபாட்டுவகை முறையால் ஐம்புலன்களை ஐம்பொறிகள் வழி இயக்கி நடத்தும் மனம், இறை வழியில் பயன்படுமாறு ஈடுபட உரனென்னும் அறிவின் மேற்றாகிய திண்மை (will-power) மனத்துள்ளே இயல்பாக அமையும், இவ்வகையாக நேர்மையில் எழும் உரினில் ஊன்றிய மனம் அமைதியுற்று அகமுகமாக வீட்டின்பத்தை மெய்யறிவால் நுகரும் நிலையினை பழமுதிர்ச்சோலை யெனும் ஆறுவது படைவீட்டினில் உணர்த்தப்பட்டது அறிந்து இன்புறுக. புறவழிபாட்டினாலே அகத்தினிமையுற, படை வீடென்பது அகத்தில் பொலியும் மெய்யறிவுடன் மனம் அடங்கியிருக்கும் இடமாகக்கொண்டு, இன்ப நிறைவில் அமைதியில் மனம் அருட்குணமொடு விளங்க திருப்பரங்குன்றத்தினையும் அவாவாகிய அலையினால் அலைப்புறாது அறிவின்பத்தில் மனம் பதிந்திருக்க திருச்சீரலை வாயினையும், மனம் உள்ளொளி ததும்ப, யாவராலும் விரும்பப்படும் தன்மையோடு (திரு) பசுவாகிய உயிர் (ஆ) ஞாயிற்றின் கதிரொளியொடு (இனன்) திகழ்ந்திருக்க, திருவாவினன் குடியினையும், மெய்யுணர்வு மேவிய உயிர்மெய்ஞான உள்ளத்து அழகுடன் நிலைத்திருக்க, திருவேரகத்தினையும், அமைதி உணர்வுக்கு மூலகாரணமாயுள்ள அகமலைக்குரிய துரிய நன்னிலையில் உயிர் இறைபால் உறவு பூண்டு சிவதுரியம், பரதுரியம், சுத்த துரியம், குரு துரியம், சிவ துரியம், சத்தி துரியம் முதலாய துரிய மலைகளில் அனுபவக்காட்சியுற்று பேரின்பத்தில் திளைத்திருக்க

குன்றுதோறாடலையும், இந்திரிய இன்பப் பழங்களைச் சுவையாது (Forbidden fruits) ஆறெழுத்துப் பழத்தின் சுவையுண்டும் அறிவொளி கொண்டும் அன்புடைய நன்மொழிகொண்டும் முருகனோடு இரண்டறக்கலக்க பழமுதிர்ச்சோலையினையும் நக்கீரர் எடுத்துக் காட்டி, படைவீடுகள் எத்தகையதாய் வாழ்விற்கு இன்றியமையாத இணக்க முறையில் அமைந்துள்ளதையும் தெளியக்காட்டியுள்ளது உளங்கொளற்பாலது. இதற்குரிய விளக்க விரிவினை இவ்வாசிரியரது 'திருமுருகாற்றுப்படை' எனும் கட்டுரையில் த. பொ. துணர் 28 பக்கம்: 287-ல் காண்க.

நக்கீரர் தம் காலத்தில் நிலவிய முருகனைப் பற்றிய, மலைவாணர்களாகிய பழங்குடி மக்கள் மடமையால் தழுவும் கொள்கைகளை மாற்றி புதுமெருகுடன் இளமைக் குன்றுது எழிலோடிலங்கும் முருகனை அருவுருவதத்துவத் தமிழ்க்கடவுளாகவே அமைத்து, திருமுருகாற்றுப்படையில் இருவேறு வழிபாடுகளை விளக்கியுள்ளது. உணரற்பாலது.

> நார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
> வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்!
> கடவுள ாயினு மாக
> மடமை மன்ற வாழிய முருகே' (நற்றிணை—34)

என நற்றிணையில் வந்த கடை அடியினை

> மடமை வென்ற வாழிய முருகே

எனப் புதியதாக மாற்றி அமைத்துக்கொள்ளுமாறு வகை செய்து நக்கீரர் இயற்கையின் உயிராகிய இறைவனை இயம்பரு அன்பும் தொண்டும் பூண்டு அடையும் வழியினைப் புகட்டியுள்ளார்.

கொழுவிடைக் குருதியொடு தூய வெள்ளரிசியைக் கலந்து சிறுபலியாக வலிமை வாய்ந்த முருகனுக்கு, மலையில் வாழும் பழங்குடிமக்கள் மடமை மிக்க மாபாதக மூடக்கொள்கையுடன் படைத்து விழாச் செய்து வணங்கி கொண்டாடியதில் முருகன் நயந்து மூழ்கியிருந்த வழக்கியலைக் குறிக்க, ஈண்டு 'மடமை மன்ற வாழிய முருகே' எனக்கூறப்பட்டது காண்க. உலக வழக்கில் இவ்வாறு போற்றப்பட்டு வழிபட்ட முருகனை ஆற்றுப்படை இலக்கிய வழக்கில், உயிர்ப்பலி பீக்கி, மனத்தூய்மை முகத்தால் நாகரிக முருக வழிபாட்டின் இயற்கை வளர்ச்சியினை நக்கீரர் விளக்கியது ஈண்டு ஊன்றி உணத்தக்கதாம். இறைமுருகன், பழையவை 'அனைத்திற்கும் தொல்லோனும் பின்னை புதியவைகளுக்கெல்லாம் புதிய இயல்பொடு

இருக்கும் பான்மையினையும் நக்கீரர் தனது ஆற்றுப்படையின் வழி விளக்கி முருகனது தொன்மை கோலத்தைப் புதிய முறையில் புந்துணர்வு எழுமாறு மெருகிட்டு, அவ்வுணர்வினால், மக்கள் அறிவும் ஆற்றலும் மிகுமாறி மக்களை அறநெறியில் நடப்பதற்கு வழி காட்டினர்.

புற இயற்கைகளை புலனறிவின் துணைகொண்டு ஆய்ந்து மெய்ம்மை தெளிந்து சிறந்தது பழகும் தன்மையுடையரே புலவராதலின், அத்தகையோர் செய்கடனறிந்து, ஒலித்தலில்லாத செல்வர் முன்னின்று இரத்தலும், இரந்து ஏற்பதும் இகழ்ச்சியே என்பது, நற்றமிழ் வல்லுநராய் அறிவாட்சி செலுத்தி மிளிர்ந்த நக்கீரரது கருத்தாதலின், அவர்,

'கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்

றிரப்பு மோரே ஏருடைத்து'

என வள்ளுவர் கூறியது போன்று, யாதொரு அழகினை இரந்துழலுதலில் காண்கிலர், செல்வம் என்பது பிறன்கடைவாயில் இரந்து செல்லாமையாதலை எளிதிற் எழிலுற புலப்படும்படி, கற்க நானூறும் அகநானூறில் 'பிறன்கடைச் செலா அச் செல்வம் என ஒரு அருந்தொடர் வருதலான், செல்வமென்பது இன்னது எனுங் கருத்து விளங்குதல் காண்மின் இரத்தலின் இழிவையும் சிறுமையும் துயருழக்கும் பாவ்நிலைமையும், நல்ல உயிரினங்புகள் சிதைவினையும் இழக்கவினையும் இன்னல் இயல்பினையும் நக்கீரர் கண்டுணர்ந்தார். அதனாற்றான் வறுமை நிலையிலும் வள்ளன்மைப் பண்போடு வாழும் புலவர்களையும் ஏனையபெருமக்களையும் 'இன்னே பெறுதி நீ முன்னிய வினையே' யென இறை முருகனது அரவணைப்பில் வாழும்படி வழி காட்டிடவே, நக்கீரர் வாழ்வமைதிகள் பல அமையத்தேக்கி விழிமியது பயக்க திருமுருகாற்றுப்படையினை தெய்வப் பெற்றியுடன் யாத்தருளி, ஆற்றுப்படை இலக்கியத்தை உருகிய உணர்வோடு வளம் படுத்தியதுமகிழத்தக்கது.

ஆற்றுப்படை இலக்கியத்தின் போக்கின் வழி நோற்றலின் ஆற்றலையும் தவத்தின் மாட்சியும் ஆட்சியும் திட்பமசக உணர்த்தும் பெற்றிமையினை அறிதலும் ஆய்தலும் வகையான் இன்பம் தருதலான், அவ்விலக்கியத்தின் மென்மையும் மேன்மையும் தேறுதல் வேண்டும் தவஞானச் சிறப்பொடு அருணிலைக்கண் விளங்கினாது இயல்பை திருமுருகாற்றுப் படையின் திருவாவினங்குடிப் பகுதியில், ஏாசற விமைக்கும் உருவினர், இகலோடு செற்றம் நீங்கிய மனத்தினர், கற்றேறறியா அறிவினர், காமமொடு கடுஞ்சினங் கடிந்தகாட்சியர், இடும்பையாவதும் அறியா இயல்பினர்' என மதிக்கப்படுவது

விளங்கா நிற்கும். தன்னலமற்ற அன்னார், வேண்டிய வேண்டியாங் செய்தும், வனப்பு வாய்ப்புடன் தெய்வதலன் பல எய்தி, விலங்கு உலகம் அவர் ஆணைவழி ஏவல் செய்யும் அருணிகழ்ச்சியின் வண்ணக் காட்சியை பெரும்பாணாற்றுப்படை வழி தனிகு துணியப்படும். தலச் சிறப்பு வாய்ந்தார் இருக்கையின்கண் மந்திகள் அங்குள்ள குப்பைக் கூளங்களையும் செத்தைகளையும் அப்பால் படுத்தி அவ்விடத்தை துப்புரவு செய்தலும், அவர் தம்மை கண்டளவால் புல்வாயும் புலியும் தம்மியற்கைத் தன்மையிழந்தும் மாறியும் ஒருங்கு துயில் கொள்ளலும் யானைகள் அவர் செந்தீ வேட்டற்காக விறகுகள் கொணர்தலும்

> மந்தி சீக்கும் மாதுஞ்சி முன்றிற்
> செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
> களிறுதரு விறகின் வேட்டும்
> ஒளி றிலங் கருவிய மலை' [பெ. ப. 497—500]

என்று வருதலை நுணுகி ஆய்தற்பாலது. இதனுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'மந்தி சீத்தலும் மாத் துஞ்சலும், களிறு விறகு தருதலும் இருடிகளாணையால் நிகழ்ந்தன வென்லுணர்க' என உள்ளங் கவருமாறு விதந்தோதியுள்ளார். இதன் மெய்ம்மையினை உறுதிப்படுத்தி வலியுறுத்தும் வகையில்

> கான யானை தந்த பிறகிற்
> கருந் தெறற் செந்தீ வேட்டுப்
> புறந்தாழ் புரிசடை புலர்த்து வேனே' (251)

என புறம் பாரித்து சிறப்பித்தலை 'கானயானை தந்த வற கென்றது இவன் தவமிகுதியான் அதுவும் ஏவல் செய்தல்' எனவரும் அதன் உரை நினைவு கூர்விக்கின்றது. மற்றும் நச்சுடை நாகம் ஆய் அண்டிரன் எனும் கடையெழு வள்ளலாரது அருட்டிறத்தில் கட்டுண்டு தான் பெற்ற கலிங்கமொன்றை அவ்வள்ளலுக்குக் கொடுக்க அவ்வள்ளல் அதனை பேரன்பின் பெட்டலால் போர்த்தி மகிழ்ந்த நறுங் குறிப்பு சிறுபாணாற்றுப்படையில்

> 'நீல நாகம் நல்கிய கலிங்கம்
> ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
> சாவந் தாங்கிய சார்ந்துபுலர் திணிதோள்
> ஆர்ம நன் மொழி ஆய்' (96—99)

என நலம்பாடுடன் நூவலப் பட்டுள்ளதைக் கருத்தாய்ப் பகுத்த றியப் பாலது.

எனவே இதுகாறுங் கூறியவாற்ருல், மக்களைத் தெய்வத்தன்மை யொடுவிதித்திகழ மெய்யின்பத் திருவினராகவும், மெய்வாழ்வுத் திருவாளராகவும் ஆக்கவல்ல உண்மை நலமும் மாட்சிமையும் கொண்டுள்ளது ஆற்றுப்படை இலக்கியம் என்பது அதனைச் சிறிதாழ்ந்தறிந்து பயில்வார்க்கும் கண்கூடு. மற்றும் ஆற்றுப்படை இலக்கியம் தெய்வச் செந்தமிழை போற்றும் முகத்தால் தமிழ் மக்களின் திருவுளச் செம்மையினையும், தவத் திறனையும், தவஞானச் செவ்வியினையும், துறவுப் பேற்றினையும், பொருண்மை தோன்ற நினைவு கூரச் செய்யும்அருமைப்பாடு அதன் மரபாயிற்றென்க வென்பதைக் கருதுங்காலை மருட்கை யுடைத்தே.

தொல்காப்பிய மெய்ம்மயக்க மரபுகள்

பேராசிரியர் ச. பாலசுந்தரம் கரந்தைப் புலவர் கல்லூரி.

(துணர் 54, மலர் 6 — பக்கம் 131 — தொடர்ச்சி)

மெய்ம்மயக்கத்தைப் புணர்மொழிக்கும் பொதுவெனக் கொண்ட இளம்பூரணர் கருத்தை நச்சினர்க்கினியர் ''ஞநமவ'' என்னும் நூற்பா உரையுள் மறுத்துக் கூறுவதனுல் இவர் மெய்ம் மயக்கம் ஒருமொழிக்கண்ணேதான் வரும் என்னும் கொள்கை யுடையார் என்பதைத் தெளியலாம். மேலும், இவர் 22ஆம் நூற்பா உரையுள்

> '' அம்மூவாறும் என்னும் சூந்திரமுதலாக மெய்நிலைச் சுட்டின்எனபதீருக் மேற்கூறும் மொழிமரபிற்குப் பொருந்திய கருவி கூறுகின்றதென்றுணர்க எழுத்துக் கள் தம்முள் கூடுமாறு கூறுதலின் ''

என்று வரைந்திருத்தலால் மெய்ம்மயக்கம் புணரியலை நோக்கிய கருவியன்று என்பது இவர் கருத்தென்பது புலப்படுகின்றது. அதனுன் இவர் ''அம்மூவாறும்', என்னும் நூற்பாவின்கண் வரும் ''தெரியுங்காலை'' என்னும் தொடரை மிகையெனக்கொண்டு அம் மிகையால் உயிரும், மெய்யும்,— உயிர்மெய்யும் தம்முள் தொடர்ந்து மொழியாக வருவது பற்றிய விதிகளாகவே இம்மெய்ம்மயக்க விதி கூறும் நூற்பாக்களை விளக்குகிருர். அம்முறையில் இந்நூற்பாக்களை மொழியாக்கத்திற்கு உரிய கருவிகள் என வரைந்தார். இம்முதற் கோணல் முற்றுங் கோணலாக ஆயிற்று.

இனி மெய்ம்மயக்கத்தை வகைப்படுத்துவதில் இவர்கள் செய்துள்ள குழப்பங்களைக் காண்போம்.

இளம்பூரணர்; இம்மெய்ம்மயக்கமானது உடனிலை மெய் மயக்கம் — வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இருவகைப்படுமெனக் கொண்டார்; நச்சினார்க்கினியர்; மெய்ம்மயக்கம் — உடனிலை மெய் மயக்கம் என இருவகைப்படுமெனக் கொண்டார். நன்னூலாரும் பின்னூலாரும் இளம்பூரணர் கருத்தைத் தழுவிக் கூறியுள்ளனர்.

மற்றும் இங்கே மயக்கமென்பது நின்ற எழுத்து வரும் எழுத் தோடு கூடும் நிலைபற்றியதா, அன்றி வரும் எழுத்து நின்ற எழுத் தோடு கூடும் நிலை பற்றியதா, அன்றி இரண்டும் தம்முள் ஒருசேரக் கூடும் என்பதா? இதுபற்றியும் இவ்வுரையாளர்கள் குழம்பியுள்ளனர். முதற்கண் எவ்வெழுத்துக் கூடுதலை ஆசிரியர் மயக்கம் எனக் கூறு கிறார் என்பதைப் பார்ப்போம்.

''டறலள எஃனும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூவெழுத் துரிய''

''அவற்றுள்; லளஃகான முன்னர் யவவுந் தோன்றும்''

என்பவை முதலாக ஆசிரியர் கூறும் நூற்பாக்களை நோக்கின், நின்ற எழுத்தோடு மேல் வரும் எழுத்து வந்து புணர்தலையே ஆசிரியர் மயக்கமெனக் கூறுகின்றார் என்பதை அறியலாம்.

அன்றி நின்ற எழுத்து மேல்வரும் எழுத்தோடு சென்று புணர் தலை அவர் கருதியிருப்பின்

''டறலள நான்கும் கசபவோ டியையும்''

என்றாற்போலக் கூறியிருப்பார்' அன்றி இரண்டும் தம்முள் ஒரு சேரப் புணரும் எனக் கருதியிருப்பின்

''டறலள நான்கும் கசப மூன்றும்
தம்முள் மயங்கி நிற்றற் குரிய

என்றாற் போலக் கூறியிருப்பார் என்க.

மெய்ம்மயக்கம் என்பதற்கு விளக்கம் :—

தனிமொழி அல்லது புணர்மொழிக்கண் நிற்கும் ஒரு மெய் யெழுத்தை அடுத்து ஒருமெய்யெழுத்து (இது தனி மெய்யாகவும் இருக்கலாம் உயிர் ஏறிய உயிர்மெய்யாகவும் இருக்கலாம் ஒத்த மெய்யாகவும் இருக்கலாம் வேறு மெய்யாகவும் இருக்கலாம்) வந்து கூடி இயைதலையும், இயையுங்கால் அவ்வெழுத்து எய்தும் (ஒலி)

நிலையையும் ஒருசேர உணர்த்துவதே மெய்ம்மயக்கமாகும், ஈண்டு மெய்யென்பது ஒலிவடிவையேயாம் எடுத்துக்காட்டாகக் 'க' ககர மெய்யினை வந்தியையும் மெய்யாக வைத்து அதன் மயக்க இயல்பைக் காண்போம்.

ககர மெய் வல்லினத்தைச் சேர்ந்தது. முதல் நா முதல் அண்ணத்தைப் பொருந்தப் பிறப்பது, இது தனக்கு முன்னின்ற மெய்யோடு மயங்குங்கால் பதினொரு மெய்களோடு மட்டுமே மயங்கும் அவை ட றலள ய ரழ ங ண ன க என்பன. 'மயங்கும்' நிலையாவது; தன் தன்மை திரியாமல் உள்ளவாறிருத்தல். தன் தன்மை திரிதல். சிறத்தல் என்பனவாம், எவ்வாறெனின் ?

கட்க — கற்க — வெல்க — கொள்க — செய்க — துய்க்க

ஆர்கலி — பகர்க — பார்க்க — வாழ்க — புகழ்க — வீழ்க்க

— வங்கம் — பாழ்ங்கிணறு — உண்க — கண்க

என்க — வன்கணம் — தொக்க (ன) காக்க.

எனவருவனவற்றுள் உள்ள ககரத்தின் ஒலி முறையே

KA — HA — KKA — KHA — KKA — HA — KKA — GA — GGA — KGA — KKA. என

ஒலித்து நிற்பதைக் காணலாம்.

இவற்றுள் டகாறகரங்களின் பின்னிற்பவை தன்தன்மை திரியாமலும், லள முதலியவற்றின் பின் நிற்பவை திரிந்தும், யரழக்களின் பின் இரட்டித்து நிற்பவையும் — ககரத்தின் பின்நிற்பவையும் சிறந்தும் ஒலித்தலைக் காணலாம்.

இங்ஙனம் வல்லெழுத்தாகிய ககரம் இயல்பான வல்லொலியாகவும் — திரிந்த மெல்லொலியாகவும் — தேய்ந்த இடையொலியாகவும் — ஊன்றிய வல்லொலியாகவும் வேறுபடக் காரணம் இது தனக்கு முன்நின்ற எழுத்தோடு தனித்தும் இரட்டித்தும் கலந்து மயங்கினமை என்பது புலனாகும், இக்கலப்பினால் எய்தும் நிலையையே ஆசிரியர் மயக்கம் எனச் சுட்டியுள்ளார் என்பதைத் தெளியலாம்.

அவ்வாறாயின் கட்க — கற்க என்றாற் போல்வனவற்றுள் ககரம் தன்தன்மை திரியாது நிற்றலின் ஒலிமயக்கமில்லை. ஆதலின் அவை போல்வனவற்றை நீக்கி ஏனையவற்றை மட்டும் மெய்ம்மயக்கமெனக் கூறியிருக்கலாமே எனின் ?

மேல்வரும் புணர்மொழிக்கண் அவைபடும் செய்கைகளை ஆசிரியர் மெய்பிறிதாதல் — மிகுதல் — குன்றல் — இயல்பு என நான்காக வகுத்துக் கூறுவார்; அவ்வழி இயல்பென்பது திரிபுபடாதவற்றையன்றே? ஆண்டு அதனையும் சேர்த்தே உயிர்மயங்கியல் புள்ளிமயங்கியல் எனப் பெயரிட்டு இயல்பு புணர்ச்சிக்குவிதி கூறுவார். அவ்வாறேஈண்டும் இருநிலையையும் மயக்கமென்று தலைப்பிட்டு விதி கூறினர் எனத் தெளிக. இவ்வாறு கூறுதல் இலக்கண மரபென்க, அன்றியும் ஊன்றி நோக்கின் கட்க—கற்க என்பவற்றுள்ளும் ககரம் சிறிது ஒலி வேறுபடுதலை எஃகு செவியான் உணரலாம்.

நீரொடு பாலைச் சேர்ப்பினும் — நீரொடு நீரைச் சேர்ப்பினும் கலப்பு என்பதே வழக்காகலின் திரிபினும் திரியாதாயினும் ஒன்றோடு ஒன்றுவந்து இணைதலின் மயக்கம் என்றார் எனக்கொள்க.

இனி இம்மெய்ம்மயக்கம் தனிமொழி—புணர்மொழி இரண்டற்கும் பொதுவெனக்கொள்ளாமல் ஒருமொழிக்கண்ணதே என்றும் இருமொழிக்கண் ஆயின் அவை புணரியலுள் அடங்கும் என்றும் ஒருசாரார் சாதிப்பது பொருந்துமாறில்லை. ஆசிரியர் கருத்து அதுவாயின் இதனைத் தனி எழுத்துக்களைப்பற்றிய மரபுகளைக்கூறும் நூன் மரபினுள் வைக்காமல் ஒருமொழியின் முதனிலை இறுதிநிலை பற்றிய மரபுகளைக் கூறும் மொழிமரபின்கண்வைத்துக் கூறியிருப்பார் என்க. அங்ஙனமாயின்

யரழ என்னும் புள்ளி முன்னர்க்

கசதப ஙஞநம ஈரொற்றாகும்

என மொழி மரபின்கண் கூறியிருப்பது பொருந்துமோ எனின்? இந்நூற்பா மொழி இயல்புபற்றியதன்றி மயக்க விதிபற்றியதன்று என்பதை இதன்பொருளைப் பின்னர் ஆராயுமிடத்து விளங்க காணலாம்.

மற்று இம்மயக்கவிதி புணர்மொழிக்கும் பொதுவெனின் மெய்யீற்றின் முன் நாற்கணமும் வந்து புணரும் புணர்ச்சி விதிகள் கூறும் நூற்பாக்களால் இவ்விலக்கணம் பெறப்படுமாதலின் ஈண்டும் கூறியது மிகையாகாதோ எனின் ? கூறுதும்

பெயரும் தொழிலுமாகிய சொற்கள் ஒன்றோடொன்று தொடருங்கால் அவை நிலைமொழியாயும் வருமொழியாயும் தம்முள் ஒத்தும் உறழ்ந்தும் ''நிறுத்த சொல்லின் ஈறுகெழுத்தொடு குறித்து வருகிளவியின் முதலெழுத்தியையப் பொருத்துவதே புணர்ச்சியாகிய

மயக்கமென்றும் அப்புணர்ச்சி மூன்றுதிரிபும் ஒரியல்புமாகிய நான்கு வகையாக நிகழுமென்றும் கூறுவார் ஆசிரியர். அவ்வழி, நிலைமொழிக்கண் ஈறாகவரும் மெய்யெழுத்துக்கள் பதினொன்றே என்றும் வருமொழிக்கண் முதலாகவரும் மெய்யெழுத்துக்கள் ஒன்பதே என்றும் வரையறை செய்துள்ளார் ஆசிரியர், ஈண்டுக் கசதப என்னும் நான்கைத் தவிர்த்து ஏனைய பதினான்கு மெய்களும் நிற்க இவற்றோடு டறலளழணன என்னும் எட்டினைத்தவிர்த்து ஏனைய பத்து மெய்களும் வந்து மயங்கும் நிலைமைகளைப்பற்றி கூறுகின்றார் ஆதலின் புள்ளி மயங்கியலுள் புணர்ச்சிபற்றிக் கூறும் விதிகளால் இம்மயக்கம் பற்றிய நிலைகளையெல்லாம் அறிந்து கொள்ளுதல் இயலாதென்க

அஃதாவது ''டறலள என்னும் புள்ளி முன்னர்'' எனவும் ''முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்'' எனவும் ஈண்டுக் கூறுதலின் டகரறகரங்களை ஈறாக உடைய சொற்களும் ஙகரத்தை முதலாக உடைய சொற்களும் தமிழ்மொழிக்கண் இலவாகலின் இவைபோல்வனவற்றின் மயக்கவிதிகளைப் புணர்ச்சிவிதி கூறும் நூற்பாக்களால் தெரிந்துகோடல் இயலாதென்க.

அற்றன்று வாட்கண்—பொற்கோயில் மரங்குறிது எனவரும் புணர் சொற்களான் டகர றகரங்களின் பின் ககரம் மயங்கும் என உய்த்துணரலாமெனின்? இவற்றின் நிலைமொழிகள் வாள்—பொன் மரம் என்பனவன்றே இவை ககரம் வருமொழியாக வந்துதமையால் திரிந்துள்ளன. இவற்றுள் மகரமொழிந்த ஏனைய ளகரமும் னகரமும் யாண்டும் திரிந்தே வருதல் இல்லை வாள்கடிது — பொன் கடிது எனவும் வரும். ஈண்டுத் திரியாமல் நிற்கும் ளகரனகரங்கள் ஆண்டுத் திரிந்து நிற்கின்றன. எனவே திரிவதும் திரியாமல் நிற்பதற்கும் மயக்கவிதி காரணமாக இல்லை. வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியுமாகிய பொருள் நோக்கமே காரணமாக உள்ளது. ஆதலின் புணர்ச்சி விதிகளைக்கொண்டு மெய்ம்மயக்க விதிகளை எல்லாம் தெரிந்துகொள்ளல் இயலாதென்பது வெளிப்படை. மேலும்

புணர்ச்சி விதிகள் நிறுத்த சொல்லின் ஈற்றெழுத்தையும் குறித்துவரு கிளவியின் முதலெழுத்தையும் பற்றி மட்டும் கூறுவனவாக அமைந்திருக்கவில்லை. அகம் + கை = அங்கை என நிலைமொழியின் இடையே உள்ள எழுத்துக் கெடுதலும் ஆதன் + தந்தை = ஆந்தையென நிலைமொழி இறுதி இரண்டும் கெட்டுவருமொழியின் முதலும் கெடுதலும் — பொன் + படை = பொலம்படையென நிலைமொழியீறு திரிந்து சில எழுத்துத் தோன்றுதலும் — நும் + குறியீர் = நீயிர் குறியீர் என நிலைமொழி திரிந்து வேறுதலும் —

ஒன்பது = நூறு = தொண்ணூறு எனப் பலவாறு திரிந்தமைதலும் கள்+தட்டு = கள்ளனந்தட்டு. விண் + கொட்டும் = விண்ணத்துக் கொட்கும் எனச் சாரியைப்பெற்றுப் புணர்தலும் ஆகிய பல்வேறு செய்கைகள் மொழி மூவிடத்தும் நிகழ்தலின் சொற்புணர்ச்சியாகிய புணர்மொழி இலக்கணம் வேறு, எழுத்தும் புணர்ச்சியாகிய மெய்ம் மயக்க இலக்கணம் வேறு என்பதை அறியலாம்.

ஆகவே இன்னின்ன மெய்களின் பின் இன்னின்ன மெய்கள் வந்து இணையும் என்னும் மெய்ம்மயக்க மரபுகள் தனிமொழி புணர் மொழி இரண்டற்கும் பொதுவே என்பது தெளிவாகும்.

இனி இவற்றை இடைநிலை மெய்ம்மயக்கம் எனப்பெயர் தந்து கூறுதல் பொருந்துமா என்பதுபற்றிக் காண்போம்.

தொல்காப்பியர் இதனை இடைநிலை மெய்ம்மயக்கம் எனக் குறிப்பாகவேனும் யாண்டும் கூறிற்றிலர் அவ்வாறு அவர் கருதி யிருப்பின் இவ்விதிகளை நூன்மரபில்வைத்துக் கூருமல் மொழிமரபில் வைத்துக் கூறியிருப்பார். உரையாசிரியர் கருத்தைத்தழுவி நூல் செய்த நன்னூலார் இடைநிலை மயக்கமென்று தெளிவாகக் கூறி யுள்ளார் இடைநிலை என்றுகொண்டால் இம்மயக்கம் ஒருமொழிக் கண்ணேதான் நிகழ வேண்டும். ஆனால் அவர் கூறியுள்ள விதி யமைப்பு நூற்பாக்களை நோக்கின் ஒருமொழி புணர்மொழி இரண் டினும் காணவேண்டிய நிலையே உளது. உரையாசிரியராகிய சங்கரநமச்சிவாயர் இரண்டற்கும் பொதுவென்றே கூறி விளக்கி யுள்ளார். அவர் புணர்மொழியாயினும் இம்மயக்கம் இடையேதான் நிகழ்கின்றதாகலின் பொருந்துமெனக் கருதினர் போலும். இது நிற்க.

தொகைமொழிகளை ஒரு சொல் நடையவாகக் கருதி ஒரு சாரார்விளக்குப. உரிஞ்யாது—பெய்வளை—கொல்யானை வேர்த்தலை என்றாற் போல வருவனவற்றுள் உரிஞ்யாது என்பதைத் தவிர ஏனைய ஒரு சொல் நடையவாகிய தொகைமொழிகளாயினும் அவற்றுள் அமைந்துள்ள சொற்கள் இரண்டென்பதில் தடையில்லை. அவ்வழிக் காணும் மயக்கம் மொழியின் ஈறும் முதலும்பற்றி நிற்ற லின் "இடைநிலை" என வரையறுப்பது பொருந்துமாறில்லை எனலாம். அற்றன்று சொல்வகையான் இரண்டாயினும் புணர்ந்த பின் ஒருசொல் நடையவாய் நிற்றலின் மயங்கும் எழுத்துக்கள் இடைநின்ற எனக் கூறல் பொருந்துமன்றே எனின்? ஆசிரியர்

செய்யுளிறுதிப் போலி மொழிவயின்
னகரமகரம் ஈ ரொற்ருகும் (மொழி மரபு: 18) என

ஒரேஒருசொல்லின் இறுதிக்கண் நிகழும் மயக்கம்பற்றியும் சுட்டிக் கூறியுள்ளமையான் அது பொருந்தாதென்பது தெளிவாம். ஆகவே இடைநிலை மயக்கம் என்பது மிகுதிபற்றிய குறியீடெனக்கொண்டு அமைதியுறலாம்,

அடுத்து இம்மெய்மயக்கத்தை வேற்றுநிலை — உடனிலை என இருபாற்படுத்துவதும் — தனிமெய்ம்மயக்கம் — உயிருடன் கூடிய (உயிர்மெய்) உடனிலை மயக்கம் என இருபாற்படுத்துவதும். தொல் காப்பியர் கருத்திற்கும் இலக்கண முறைமைக்கும் பொருந்துவதாக இல்லை. இம்முடிவு மயக்கவிதிபற்றி ஆசிரியர் கூறியுள்ள நூற்பாக் களின் செம்பொருளைத் தேர்வதனிகண் புலனாதமாதலின், அந்நூற் பாக்களின் நேரிய பொருளை இனிமுறையே காண்போம்.

மெய்ம்மயக்கம்பற்றி ஆசிரியர் நூற்மரபின்கண் முதன் முதலாகக்கூறும் நூற்ப்பா

அம்மூவாறும் வழங்கியல் மருங்கின்

மெய்ம்மயக் குடனிலை தெரியுங்காலை

டறலள வென்னும் புள்ளிமுன்னர்க்

கசப வென்னும் மூவெழுத்துரிய '' என்பதாகும்

இந்நூற்பாவை உரையாளர் அனைவரும் இரண்டு நூற்பாவாக அறுத்து உரைகூறியுள்ளனர். அதற்குக் காரணம் இம்மயக்கவிதி இந்நூற்பாவோடு முடிவுருமல் மேலுந் தொடர்ந்து செல்லுதலின் எனக் கருத வேண்டியுளது. அவர்கள் இந்நூற்பாவினுள் உள்ள முதல் இரண்டு அடிகள் மெய்ம்மயக்கமாவது இன்னது என அதன் இலக்கணத்தையும். அதன் வகையையும் கூறுவதாகக் கருதி அவ் இரண்டடிகளையும் ஒரு நூற்பாவாகப் பிரித்துரைத்துள்ளனர். டறலள முதலாக வரும் ஏனையவை மயங்கும் எழுத்துக்களைப் பற்றிக் கூறுவவனவாகக் கருதியுள்ளனர் எனத் தெரிகின்றது.

அவ்வாறு அறுத்துக்கூறியவர்கள் முதல் இரண்டடிகளையும் அதிகாரச் சூத்திரமாகவைத்து பொருள் கூறியிருக்கலாம் கூறியிருப் பின் பகுப்புக்களைப்பற்றிய குழப்பங்கள் தவிர்ந்திருக்கும் அவ்வாறு கருதாமல். இரண்டடிக்குள்ளேயே எழுவாய் பயனிலைகளைக் காண முற்பட்டுப்பயனிலை காணுமையால் பயனிலையை வகுத்துக் கூறலா யினர். அதனுன், நூற்பாவுள் இல்லாத•ஆசிரியர்கருதாத பொருளை எல்லாம் இதன்கண் திணிக்க வேண்டியவராயினர். இனி அவ் இரண்டடிகளின் பொருளைக் காண்போம்.

" அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை "

அம்மூவாறும் = மேற்கூறப்பெற்ற மூவினமாகிய மெய்கள் பதினெட்டும் வழங்கியல் மருங்கின் = (அவை மொழியாக்கம் பெற்று) இருவகை வழக்கின் கண்ணும்நிகழுமிடத்து. மெய்மயக்கு = தன்வடிவு மயங்குதற்பொருட்டு. உடனிலை = (ஒன்றன் பின் ஒன்று வந்து) சார்ந்து நிற்கும் நிலையை. தெரியுங்காலை = ஆராயுமிடத்து (ப் பின் வருமாறு மயங்குதற்குரியவாகும்)

விளக்கம் :—

அம்மூவாறும் என்பது எழுவாய். உடனிலை தெரியுங்காலை என்பது வரும் நூற்பாக்கள் தோறும் சென்றியையும் வழங்கெனபது மெலித்தல் விகாரம் 'மெய்' என்றது வடிவை அஃது ஈண்டு ஒலி வடிவையும் வரிவடிவையும் சுட்டிநின்றது இதனை,

மெய்தெரி வளியிசை அளபு நுவன்றிசினே (எழு 103)
மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும் (எழு 30)
யஃகான் நிற்றல் மெய் பெற்றன்றே (எழு 27)
ஒற்றுமை கெடுதல் தெற்றென்றற்றே (எழு 133)

என வருவனவற்றால் அறியலாம். (இதுபற்றிப் பின்னர் விளக்கப் பெறும்) ஒலிமயங்குதல்பற்றி மேலே கூறப்பெற்றது.

இனி உரையாசிரியன்மார் கருத்துக்களையும் அவை நூற்கருத்திற்கு இயையாமையையும் கண்பாம; இந்நூற்பாவிற்கு

இளம்பூரணர் :—

மேற்சொல்லப்பட்ட பதினெட்டு மெய்யும் தம்மை மொழிப் படுத்து வழங்கும் இயல்பு உளதாமிடத்து மெய்ம்மயக்க மென்றும் உடனிலைமயக்க மென்றும் இரு வகைய ஆராயுங்காலத்து. 'மெய்' என்றதனான் தனிமெய்யோடு உயிர்மெயக்கமன்றித் தனிமெய்யோடு தனிமெய் மயக்கமே கொள்க. என வரைந்துள்ளார்.

இவர் 'மெய்' என்பதற்கு பிற மெய் என்றும் உடன் என்பதற்கு ஒத்தமெய் என்றும் பொருள் கொண்டு அதனுன் மயக்கம் இருவகைப்படுமென விதிப்பதே இந்நூற்பாவின் நோக்கமாகக் கூறி "இருவகைய" என்னும் பயனிலையை வருவித்துள்ளார்

நச்சினார்க்கினியர் :

அங்ஙனம் மூன்று கூறாகப் பகுத்த பதினெட்டு மெய்யும் வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் எழுத்துக்களைக் கூட்டி மொழிப் படுத்து வழங்குதல் உளதாமிடத்துத் தனிமெய் தன்முன்னர் நின்ற

பிறமெய்யோடும் தன்மெய்யோடும் மயங்கும் நிலையும் அப்பதினெட்டும் உயிருடனே நின்று தன் முன்னர் நின்ற உயிர்மெய்யோடும் தனிமெய்யோடும் மயங்கும் நிலையும் என இரண்டாம் அவை மயங்கும் மொழியாந் தன்மை யாராயுமிடத்து எனவே தனித்து நின்ற எழுத்துடன் முன்னின்ற எழுத்துக்கள் தாம் கூடுமாறு கூறினாராயிற்று. 'தெரியுங்காலே' என்றதனான் உயிர்மெய்ம்முன்னர் உயிர்மெய்ம்மயக்கமும் உயிர்முன்னர்த் தனிமெய்மயக்கமும் கொள்க அவை அளை- ஆம்பல்- போல்வன இச்சூத்திரம் முதலாக மெய்ந்நிலை சுட்டின் ஈறாக மேற்கூறும் மொழிமரபிற்குப் பொருந்திய கருவி கூறுகின்றதென்றுணர்க. எழுத்துக்கள் தம்முள் கூடுமாறு கூறுதலின்'' என வரைந்துள்ளார்

இவரும் இந்நூற்பா மயக்கம் என்பதன் இயல்பு கூறுவதாகக் கருதவில்லை இளம்பூரணரைப் போன்றே மயக்கத்தின் வகை கூறுவதாகவே கருதி எடுத்தோத்தினால் இருவகையும் இலேசினால் இருவகையும் என நான்கு வகை மயக்கங் சொல்லுகிறார். மேலும் இந்நூற்பா மொழியாக்கம் பற்றிய இயல்பைக் கூறுவதாகவும் கருதுகிறார்.

இளம்பூரணர் கொண்ட வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்னும் வகையை நச்சினார்க்கினியர் உடன்படவில்லை வேறு மெய்யாயினும் ஒத்தமெய்யாயினும் அவை மெய்ம்மயக்கம் என ஒரே வகையிலடங்கும் என்பது இவர்கருத்து. உடனிலை என்பதற்கு உயிருடன் சேர்ந்த மெய் அஃதாவது உயிர் மெய்யெழுத்து என்று பொருள் சொல்லுகிறார்.

ஆக இருவகை யென்பதில் இருவரும் மாறுபடுகின்றனர். அதனால் ஆசிரியர் கருத்து இருவகை என்பதன்று என நாம் எளிதில் ஊகிக்கலாம். இளம்பூரணர் இம்மயக்க விதி புணரியலை நோக்கிய கருவி என்கிறார்- நச்சினார்க்கினியர் மொழிமரபை நோக்கிய கருவி என்கிறார். நூன்மரபிற் கூறப்பெறுவன யாவும் பிறப்பியல் தவிர பிற ஏழற்கும் கருவியாதலை இருவரும் ஓராது முரண்பட்டுள்ளனர் இது நிற்க.

நச்சினார்க்கினியர் இந்நூற்பாவின் பதவுரையுள் நின்ற எழுத்தே வரும் எழுத்தோடு கூடி மயங்கும் எனக் கருதும்படிப் பொருள் கூறுகின்றார். பின் நூற்பாக்கள் இவர்கருத்துக்கு முரணாதலின் ''தனித்து நின்ற எழுத்துடன் முன்னின்ற எழுத்துக்கள் கூடுமாறு (ங்) கூறினாராயிற்று'' எனச் சொல்லி இரண்டும் மயங்குமென அமைதி செய்து கொள்ளுகிறார் எனக்கருத வேண்டியுளது.

நச்சினார்க்கினியர் கருத்துப்படி எழுத்துக்கள் கூடி மொழியாதலைப் பற்றியதாக இந்நூற்பா இருப்பின் ஆசிரியர் இதனைமொழி மரபில் வைத்துக் கூறியிருப்பார். மற்று எழுத்துக்கள் தனித்தும் தொடர்ந்தும் மொழியாதலை மொழிமரபினுள்

ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறத் திசைக்குந் தொடர்மொழி உளப்பட
மூன்றேமொழிநிலை தோன்றிய நெறியே

என ஆசிரியர் தெளிவாகக் கூறியுள்ளார் ஓரெழுத்தொருமொழி தவிர ஏனையிரண்டும் எழுத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து மொழியாகும் என்பார் தொடர்மொழி என உடம்பொடு புணர்த்திக் கூறியுள்ளார். அதனான் முதலும் சார்புமாகிய எழுத்துக்கள் தனித்தும் இணைந்தும் தொடர்தும் மொழிநிலைமை எய்தும் என்னும் இலக்கணம் தெற்றெனப் புலப்படும். மாறாக அம்மூவாறும் எனக் கூறப்படும் மெய்யெழுத்துக்களை மட்டும் வைத்து மொழியாக்கம் கூறுகின்றார் எனக்கருதுவது விபரீத உணர்வாகும்.

கையறுநிலை

29—8—80 ஆம் நாள் மாலை 3 மணி அளவில் கரந்தைப் புலவர் கல்லூரியின் சார்பில் நிகழ்ந்த இரங்கல் கூட்டத்தில் நிறைவேற்றிய கையறு நிலை முடிபு:

பன்மொழியறிஞரும் பைந்தமிழ் ஆய்வாளரும் நாட்டுப் பற்றாளரும், விடுதலைப் போர் வீரரும் பல்துறைப் பேரறிவாளரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழக முதல் துணை வேந்தராகப் பணி புரிந்தவரும் பல அயல் நாடுகளில் தமிழ்க்கல்வியைத் தொடங்கி வைத்து அரும்பணியாற்றியவரும், பண்பு நலன்களால் சிறந்தவருமான முதுபேரறிஞ பல்கலைச்செல்வர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் 28—8—80 ஆம் நாள் இயற்கை எய்தியமை குறித்துப் பெரிதும் வருந்துகிறோம்: பெரியவர்களின் மறைவு தமிழ் மொழிக்கும், தமிழாய்வுத்துறைக்கும் பேரிழப்பைத் தருவதாகும்: இத்தகு பேராசிரியர் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும், நூற்றுக்கணக்கான அவர்தம் மாணவர்கட்கும், நண்பர்கட்கும் எங்கள் ஆழந்த துயரத்தைத் தெரிவித்துக் கொண்டு அவர்தம் நல்லுயிர் பேரின்ப அமைதியடைய வேண்டி வணங்குகின்றோம்.